**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.230/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | சித்ரா |
| Father's Name/Husband Name: | ராமலிங்கம் |
| Village : | நூத்தப்பூர் |
| Taluk : | வேபந்தட்டை |
| Age : | 40/ 2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சியானவர் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபடுகிறார்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் நான் கூறிய சங்கதிகளைத் தான் நீதிமன்றத்திலும் என் முதல் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. புகார் வாக்குமூலத்தை போலிசார் என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். புகாரை எந்த தேதியில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு பெற்றார்கள் என்றால் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருக்கும் பொழுது போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலத்தை வாங்கிக் கொண்டார்கள். தேதி நேரம் தற்பொழுது நியாபகம் இல்லை. 108 ஆம்புலன்ஸ் மூலம் யார் என்னை அழைத்துச் சென்றார்கள் என்றால் என் மகனும் மகளும் அழைத்துச் சென்றார்கள். எதிரிகள் தாக்கியதாகச் சொல்லப்படும் உருட்டுக் கட்டையின் நீளம் மற்றும் தடிமன் ஆகியவற்றை நீதிமன்ற முதல் விசாரைணயில் சொல்லி உள்ளேனா என்றால் உருட்டுக் கட்டை என்று மட்டும் தான்

சொன்னேன் நீளம் மற்றும் தடிமன் குறித்து கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. உருட்டுக் கட்டையை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எனக்கும் எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமான பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த நிலத்தை ஆளுக்கு 1.5 ஏக்கர் என நாங்களும் எதிரிகளும் பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். மின் இணைப்பை மட்டும் நாங்கள் மாற்றவில்லை என்றால் சரிதான். மின் இணைப்பு முதலில் எனது பெரிய கொளுந்தனார் கருப்பையா பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். எதிரி சீனி கருப்பையாவின் நிலத்தையும் மின் இணைப்பையும் வாங்கிக் கொண்டார் என்றால் சரிதான். சாட்சிகள் ராமலிங்கம், பிரசாந்த், ரம்யா அனைவரும் எனது குடும்ப உறுப்பினர்கள் என்றால் சரிதான். இவர்களைத் தவிர போலிசார் வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பிரச்சனை நடந்த பிறகு பக்கத்து வீட்டுக் காரர்கள் யாரையும் போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விஜய், சரசு, கருப்பையா இவர்கள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல பக்கத்து வீட்டுக்காரர்கள். சம்பவம் நடக்கும் பொழுது விஜய், சரசு, கருப்பையா இவர்கள் அனைவரும் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எனக்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான், உட்காயந்தான் உள்ளது. பூச்சு வேலை செய்து கொண்டிருந்த கொத்தனார் அல்லது சித்தாள் யாரையாவது போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த பிரச்சனை நடக்கவில்லை என்றால் சரியல்ல. கருப்பையாவிடம் இருந்து எதிரி மின் இணைப்பு வாங்கிக் கொண்டதால் தான் முன்விரோதம் கொண்டு எதிரிகளின் மீது பொய் புகார் கொடுத்து உள்ளேனா என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd./-xxxxxxx
Judicial Magistrate
Additional Mahila Court,
Perambalur.